# தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்.11/2006 நாள் 26.9.2006

தமிழ்நாட்டில், மாநகராட்சிகள், நகராட்சிகள், மூன்றாம்நிலை நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் மாதம் 13 மற்றும் 15 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டமாக நடைபெறுகின்றது. இதற்கான வேட்பு மனு தாக்கல் தற்பொழுது நடைபெற்று வருகின்றது. வேட்புமனு தாக்கல் செய்ய 27.9.2006 அன்று இறுதி நாள். 28.9.2006 அன்று வேட்பு மனுக்கள் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்களால் ஆய்வு செய்யப்படும். வேட்பு மனுக்களை திரும்பப் பெறுவதற்கு 30.9.2006 அன்று கடைசி நாளாகும். வேட்புமனுக்கள் அன்று பிற்பகல் 3.00 மணிவரை திரும்பப் பெறப்படும். அன்று பிற்பகல் 3.00 மணிக்குப் பின்னர் வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

வேட்புமனு தாக்கல் செய்யும்பொழுது, உச்ச நீதிமன்ற ஆணையின்படி, வேட்புமனுவுடன் வேட்பாளர்களின் கல்வித் தகுதி, சொத்து விபரம் மற்றும் குற்றவியல் விபரங்களை வாக்காளர்கள் அறிந்துகொள்ளும் வகையில் ரூ.20/-க்கான முத்திரைத்தாளில் ஆணை உறுதி ஆவணம் (Affidavit) வேட்பாளர்களால் தாக்கல் செய்யப்பட வேண்டும். சிற்றூராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலுக்காக போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்புமனுவுடன் சாற்றுரை (Declaration) அளித்தால் போதுமானது. இந்த ஆணை உறுதி ஆவணம் (Affidavit) அல்லது சாற்றுரை (Declaration) அளிக்கும்பொழுது காவல் துறையிலிருந்து எவ்விதமான மறுப்பில்லா சான்றும் (No Objection Certificate) பெற்று தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

மேலும், பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளுக்கு சின்னங்கள் ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், பதிவு செய்யப்பட்ட ஆனால் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளும் படிவம் "A" மற்றும் படிவம் "B" ஆகியவற்றைப் பூர்த்தி செய்து தேர்தல் நடத்தும் அலுவலர்/ உதவித் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்குக் கடைசி நாளான 30.9.2006 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்குமாறு சேர்ப்பிக்க வேண்டும். காலம் கடந்து படிவங்கள் பெறப்பட்டால் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர்கள் சுயேட்சை வேட்பாளராக மட்டுமே கருதப்படுவார்கள் என்று தெளிவுப்படுத்தப்படுகின்றது. எனவே, இதில் கடைசி நாள் வரை காத்திராமல் அரசியல் கட்சி சார்புடைய வேட்பாளர்கள் ஓரிரு நாட்களுக்கு முன்னதாகவே படிவம் "A" மற்றும் படிவம் "B" ஆகியவற்றை சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர் வசம் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

- படிவம் "A" மற்றும் படிவம் "B" ஆகியவை அசலாகவோ அல்லது புகைப்பட நகலாகவோ (ஜெராக்ஸ்) இருக்கலாம்.

- இப்படிவங்கள் (A மற்றும் B) அசலாக இருக்கும் நேர்வில் படிவங்களை அளிப்பவரின் கையொப்பம் அசலாகவும் இருக்கலாம் அல்லது ஒப்ப உருவ நேர்படி (facsimile signature) -ஆகவும் இருக்கலாம்.

- படிவம் "A"-ல் கையொப்பமிட அதிகாரம் பெற்ற பொறுப்பாளரே படிவம் "B"-லும் கையொப்பமிடும் நேர்வுகளில் படிவம் "A"-வழங்க வேண்டும் என்ற அவசியமில்லை.

இந்தப் பத்திரிக்கை செய்தி தேர்தல் அலுவலர்கள் மற்றும் அரசியல் கட்சி வேட்பாளர்களின் பயன்பாட்டிற்காக வெளியிடப்படுகின்றது.

* * *